# சக்கர வியூகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

www.sakkraviyugam.com | TNTAM/25/A1018 | sakkraviyugam2025@gmail.com

VOLUME : 01 | ISSUE: 190 | 03.1.2026 | SATURDAY | MARGAZHI : 19 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 190 | 03.1.2026 | சனிக்கிழமை | மார்கழி : 19 | விலை : ரூ.5/–



3 முன்னிலைக்கோட்டைக்கு சிற்றுந்து வசதி செய்து கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமி

4 "ஒரு சிலரின் சுயநலத்தால் தமிழ்நாடு காங்கிரஸ் அழிவின் பாதையில் செல்கிறது" : ஜோதிமணி எம்.பி

2 2025 டிசம்பரில் கார் விற்பனை அமோகம்: ஜிஎஸ்டி வரி குறைப்பால் புதிய சாதனை


## தஞ்சையில் அடுத்த மகளிர் அணி மாநாடு! : தயாராகும்

# "வெல்லும் தமிழ்ப்பெண்கள்"

## முழு விவரம் உள்ளே!

சென்னை, ஜன.3-

தி.மு.க கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி தலைமையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றிட "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடக்க இருப்பதாக கழக தலைமைக் கழகம் அறி வித்துள்ளது.

இது குறித்த விரிவான தகவல் பின்வருமாறு,

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மகளிர் மேம்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்', கல்வி கற்கும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண் திட்டம்', வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான 'தோழி விடுதி';

இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வருகிறார் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்.



அவரது தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், "பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ" என்று சொல்லத்தக்க வகையில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்"தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட ஸ்ரீ கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் முன்னிலையில், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா எம்.பி., ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்பில்;

வருகிற 19.01.2026 திங்கட்கிழமை, மாலை 4.00 மணி அளவில், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெற உள்ளது.

தஞ்சையில் அடுத்த மகளிர் அணி மாநாடு! தயாராகும் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" : முழு விவரம் உள்ளே!

மாவட்டக் கழகச் செயலாளர்/ பொறுப்பாளர்களான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ்பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., க.வைரமணி, க.அன்பழகன் எம்.எல்.ஏ., வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்ஏ;

கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல் அமைச்சர் பெருமக்களான கோவி. செழியன், சிவ வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா ஸ்ரீ நாடாளுமன்ற உறுப்பினர்களான அருண்நேரு எம்.பி., முரசொலி எம்.பி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வார்கள்.

நிறைவாக, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ நன்றியுரையாற்றுகிறார்.

## உடுமலை நகரில் உதயம் காட்டன் ஷோரூம் திறப்பு விழா



■ திருப்பூர் மாவட்டம் உடுமலை நகரில் உதயம் காட்டன் ஷோரூம் முன்னாள் எம்பி. சண்முகசுந்தரம் திறந்து வைத்தார், சீனிவாச பள்ளி முதல்வர் திருமதி சத்தியபாமா குத்துவிளக்கு ஏற்றினார். இந்நிகழ்ச்சியில் உடுமலை மணவளக் கலை மன்ற அறக்கட்டளை தலைவர் ராஜாராம் ஆடிட்டர் அவர்கள் முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். எஸ்.எம் டிராவல்ஸ் நிர்வாக இயக்குனரும் சமூக சேவகருமான எஸ் எம் நாகராஜ் அவர்கள் முதல் விற்பனையை பெற்றுக்கொண்டார். சமூக ஆர்வலர் சத்தியம் பாபு, உடுமலை பிரசன்ன விநாயகர் கோவில் அறங்காவலர் குழு தலைவர் கணேச மூர்த்தி மற்றும் உடுமலை நகர முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். உதயம் காட்டன் நிர்வாக இயக்குனர் அருண் ஈஸ்வர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

## ரெட்டியார்சத்திரம் பாதாள செம்பு முருகனுக்கு இராஜ அலங்காரம்

சின்னாளபட்டி, ஜன 02

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், காமாட்சிபுரம் ஊராட்சி, இராமலிங்கம்பட்டியில் அமைந்திருப்பது அருள்மிகு ஸ்ரீறிறிபாதாள செம்புமுருகன் திருக்கோவில். 16 அடி ஆழத்தில் செம்பினால் அமையப்பெற்ற தனி கருவறையில் செம்பினால் செய்யப்பட்ட பாதாள செம்பு முருகன் அமைந்திருப்பது இக்கோவிலின் தனிசிறப்பு. ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஸ்ரீறிபாதாள செம்புமுருகனுக்கு காலை 10 மணியளவில் பால், தயிர், தேன், திரவியபொடி, இளநீர், மஞ்சள், பஞ் சாமிர்தம் உட்பட 16 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. அதன்பின்னர் சுவாமிக்கு முத்துக்கள் மற்றும் பவளத்தால் ஆன பவளமுத்தங்கி அணிவித்து சிறப்பு இராஜஅலங்காரம் செய்திருந்தனர். நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.



ஸ்ரீ பாதள செம்பு முருகன் கோவில் சிறப்பு குறித்து கோவில் ஸ்தாபகரும், கோவில் ஆதீனமுமான அறிவானந்தசுவாமிகள் கூறுகையில், வியாழனுக்கு உரிய தங்கம், சனிக்கு உரிய இரும்பு, சுக்கிரனுக்கு உரிய வெள்ளி, சூரியனுக்கு உகந்த செம்பு, கேதுவுக்கு உரிய ஈயம் ஆகியவற்றைத் தேர்தெடுத்துப் பஞ்சலோக விக்ரஹத்தில் பாதாள முருகன் சிலை அமைந்திருப்பதால் இவரை வழிபடும் போது அனைத்து கிரஹங்களின் தோஷங்கள் நீங்கி, நல்லவை கிடைக்கும் என்றதோடு பாதாள செம்பு முருகன் அருள்பெற 8 கருங்காலி மாலைகளை வாங்கி சுவாமிக்கு அணிவித்து அவற்றை மாற்றுதிறனாளிகள் மற்றும் கூலி தொழிலாளிகளுக்கு தானமாக வழங்கினால் நல்ல பலன் கிடைக்கும் என்றார். மதியம் நடைபெற்ற அண்ணதானத்தில் நூற்றுகணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் கமிட்டியார்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## 2026ம் வருடம் திமுக கூட்டணிக்கு மாபெரும் வெற்றியைத் தரக்கூடிய வருடம்

### அமைச்சர் ஐ.பெரியசாமி இல்லத்தில் கட்சி நிர்வாகிகள்

சின்னாளபட்டி, ஜன.3

ஆங்கில புத்தாண்டு வாழ்த்துச் சொல்ல அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இல்லத்தில் கட்சி நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், தொண்டர்கள் குவிந்த வண்ணம் இருந்தனர். 2026ம் வருடம் திமுக கூட்டணிக்கு மாபெரும் வெற்றியைத் தரக்கூடிய வருடமாக அமையும் என்று தொண்டர்கள் மத்தியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூற அவரது இல்லத்தில் அரசு அலுவலர்கள், கட்சி நிர்வாகிகள், மாற்று கட்சி நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள், சமூக ஆர்வலர்கள் குவிந்தவண்ணம் இருந்தனர். கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், 2026ம்



வருடம் கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்; தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றிபெறக்கூடிய வருடமாகும். நீங்கள் அனைவரும் அயராது கழகப்பணியாற்றி மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திமுக நிர்வாகி ரெக்ஸ், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், மாநகர பொருளாளர் மீடியா சரவணன், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், மணிகண்டன், பிள்ளையார்நத்தம் முருகேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டென்னி, அக்பர், கலைராஜன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த மைதீன்பாவா, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நவாப்பட்டி முருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் நந்தகோபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி துணைத்தலைவர் முருகேசன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுமதி கணேசன், நாகலெட்சுமி ரமேஸ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, கதிரையன்குளம் பாலன், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜிப், மாவட்ட பிரதி நிதி எல்லை ராமகிருஷ்ணன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி, நந்தி நடராஜன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## வர்த்தக சிலிண்டர் விலை ரூ.111 உயர்வு

**புதுடெல்லி, ஜன.03–**

வர்த்தக சமையல் எரி வாயு சிலிண்டர் விலை ரூ.111 உயர்ந்துள்ளது.

சர்வதேச விலை நில வரத்துக்கு ஏற்ப விமான எரிபொருள் மற்றும் வர்த்தக சமையல் எரி வாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் மாதந்தோறும் மாற்றி அமைக்கின்றன.

இதன்படி, உணவகங் களில் பயன்படுத்தப்படும் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக சமையல் எரி வாயு சிலிண்டர் விலை ரூ.111 அதிகரிக்கப்பட் டுள்ளது. இதனால், டெல் லியில் ஒரு சிலிண்டர் விலை ரூ.1,691.50 ஆக உயர்ந்துள்ளது.

உள்ளூர் வரியைப் பொறுத்து இதன் விலை வேறுபடும். கடந்த டிசம் பரில் ரூ.15.5, நவம்பரில் ரூ.5 குறைக்கப்பட்ட நிலை யில் ஜனவரியில் இதன் விலை உயர்த்தப்பட்டுள் ளது. எனினும், வீட்டு பயன்பாட்டுக்கான எரி வாயு சிலிண்டர் விலை மாற்றமின்றி ரூ.853 ஆக நீடிக்கிறது.



# கோவை, தேனி, தென்காசி, நீலகிரிக்கு கனமழை எச்சரிக்கை

சென்னை:, ஜன.3-

கோவை, தேனி, தென்காசி மற்றும் நீலகிரி ஆகிய 4 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று (ஜனவரி 02) இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கோவை, தேனி, தென்காசி மற்றும் நீலகிரி ஆகிய 4 மாவட்டங்களில் இன்று (ஜனவரி 02) ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களில் நாளை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதேபோல் வடதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நாளை அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழக கடலோரப்பகுதிகள், தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் ஜனவரி 6ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# சீர்மிகு தமிழகமாக மாற்றி பிரதமர் மோடியின் சபதத்தை நிறைவேற்றுவார் அமித்ஷா

சென்னை, 3ஜன.3-

தமிழக பா.ஜ., செய்தி தொடர்பாளர் ஏ.என் எஸ்.பிரசாத் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: 'தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்' யாத்திரை நிறைவு விழாவில், தமிழகத்தில் ஊழல் திமுகவை விரட்டியடித்து வளர்ச்சி பாதையில் தமிழகத்தை உருவாக்குவேன் என்ற பிரதமர் மோடியின் சபதத்தை நிறைவேற்ற புதுக்கோட்டை வர இருக்கும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் வருகை தமிழக அரசியலில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும்.



2026 சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும். தமிழகம் வலிமை பெறும்! வளர்ச்சி பெறும் !! தமிழகத்திலும் பா.ஜ.,வின் இரட்டை எஞ்சின் ஆட்சி மலரும்!!! தமிழகத்திற்கு முன்னுரிமை அளித்து பிரதமர் மோடி வழங்கியுள்ள, வளர்ச்சி திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள், தமிழ் மொழியின் பெருமையை பேணிக்காப்பதிலும், தமிழர் நாகரிகத்தை உலகமே வழிகாட்டியாக கொண்டு செல்ல வேண்டும் என்கிற முழக்கத்துடன், திருவள்ளூர் வழியில், திருக்குறள் நெறியில் ஆட்சி நடத்தி வரும் தமிழ் மகன் மோடியின் மக்கள் நல ஆட்சி தமிழகத்தில் அமைய வேண்டும்.

மக்கள் விரோத தீய சக்தி திமுக ஆட்சி வீழ்த்தப்பட வேண்டும் என்று 2026 சட்டசபை தேர்தலுக்காக தமிழக மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். தமிழக பா.ஜ., மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நடத்தி வரும் 'தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்' யாத்திரையின் நிறைவு விழாவில் பங்கேற்க வரும் அமித்ஷாவின் புதுக்கோட்டை வருகை புத்துணர்ச்சியையும், புதிய நம்பிக்கையையும், பெரும் எழுச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

விலைவாசி உயர்வு, கொலை கொள்ளை, போதை கலாசாரம், ஊழலற்ற கொடுங்கோல் ஔரங்கசீப் ஆட்சி அரசியலுக்கு முடிவு கட்டும் வகையில் அரசியல் சாணக்கியர் அமித்ஷா மக்கள் விரோத தீய சக்தி திமுகவின் ஆட்சிக்கு முழுமையான முடிவுரை எழுத உள்ளார்.

தமிழக மக்கள் அனைவரின் மனதிலும் நம்பிக்கை கோட்டையை உருவாக்கி இருக்கும் அரசியல் சாணக்கியர் அமித்ஷாவின் புதுக்கோட்டை வருகை, மக்கள் விரோத திமுக கட்சியையும், தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் பிரிவினைவாத மதவாத அரசியல் செய்யும் திமுக ஆட்சியையும் ஆழிப் பேரலையாய் அழித்தொழிக்கும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்

# வடமாநிலங்களை வாட்டும் பனி உ.பி.யில் ஜனவரி 5ம் தேதி வரை பள்ளிகளுக்கு விடுமுறை

லக்னோ, ஜன.3-

வடமாநிலங்களில் கடும் பனி நிலவி வருகிறது. குளிர் அதிகமாகி கொண்டே வருவதால் உத்தரபிரதேசத்தில் அனைத்து பள்ளிகளுக்கும் ஜன.5 வரை விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

முன் எப்போதும் இல்லாத வகையில், டில்லி, பஞ்சாப், உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களில் சீதோஷ்ண நிலை மாறியிருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் வழக்கத்துக்கு மாறாக கடும் பனி நிலவி வருகிறது.

அதிகாலை தருணங்களில் பனியின் தாக்கம் அதிகம் இருப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கையிலும் சுணக்கம் காணப்பட்டது. இந் நிலையில் பனியின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே செல்வதால் உ..பி.யில் அனைத்து பள்ளிகளும் ஜன.5ம் தேதி வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை முதல்வர் யோகி ஆதித்யநாத் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக, தலைநகர் டில்லியில் முன்னே வருபவர்கள் யார் என்று தெரியாத அளவுக்கு கடும் பனிமூட்டம் நிலவி வருவதால் அங்குள்ள பள்ளிகளுக்கு ஜன. 15 வரை ஏற்கனவே விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கது.

# 2025 டிசம்பரில் கார் விற்பனை அமோகம்: ஜிஎஸ்டி வரி குறைப்பால் புதிய சாதனை

இந்தியா, ஜன.3-

ஜிஎஸ்டி வரி குறைப்பால் 2025ம் ஆண்டு டிசம்பரில் கார் விற்பனை உச்சத்தை தொட்டுள்ளது. குறிப்பாக மாருதி சுசுகி, மஹிந்திரா, டாடா மோட்டார்ஸ், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் மற்றும் கியா இந்தியா கார்கள் அதிகம் விற்பனை செய்யப்பட்டு உள்ளன.



கடந்த ஆண்டு செப்டம்பரில் ஜி.எஸ்.டி., 2.ளி அறிவிக்கப்பட்டு, வரி விகிதங்கள் குறைக்கப்பட்டதால் அதிகரித்த வாகன விற்பனை, ஆண்டு இறுதி வரை நீடித்துள்ளது. உள்நாட்டு வாகன நிறுவனங்களான மாருதி சுசூகி, மஹிந்திரா, டாடா மோட்டார்ஸ் ஆகியவற்றின், பயணியர் வாகன ஆண்டு விற்பனை வரலாறு காணாத உயர்வு கண்டது.

குறிப்பாக, எஸ்.யு.வி., விற்பனை, மொத்த பயணியர் வாகன விற்பனையில் 56 சதவீத இடம்பிடித்தது. முந்தைய ஆண்டில் இது 54 சதவீதமாக இருந்தது. கடந்த 2025ல் 18.44 லட்சம் பயணியர் வாகன விற்பனையுடன் மாருதி சுசூகி இந்தியா நிறுவனம் முதலிடம் பிடித்தது. முந்தைய ஆண்டில் இந்நிறுவனம் 17.90 லட்சம் வாகனங்களை விற்றிருந்தது.

* கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் மஹிந்திரா நிறுவனம் 41 ஆயிரத்து 424 கார்களை விற்பனை செய்து இருந்தது. 2025ம் ஆண்டு டிசம்பரில், 23 சதவீதம் அதிகரித்து, இந்த நிறுவனம் 50 ஆயிரத்து 946 கார்களை விற்பனை செய்துள்ளன.

* கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் 44 ஆயிரத்து 230 கார்களை விற்பனை செய்து இருந்தது. 2025ம் ஆண்டு டிசம்பரில்,13 சதவீதம் அதிகரித்து, இந்த நிறுவனம் 50 ஆயிரத்து 46 கார்களை விற்பனை செய்துள்ளன.

* கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் 42 ஆயிரத்து 208 கார்களை விற்பனை செய்து இருந்தது. 2025ம் ஆண்டு டிசம்பரில்,0.5 சதவீதம் அதிகரித்து, இந்த நிறுவனம் 42 ஆயிரத்து 416 கார்களை விற்பனை செய்துள்ளன.

* கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் 24 ஆயிரத்து 887 கார்களை விற்பனை செய்து இருந்தது. 2025ம் ஆண்டு டிசம்பரில், 37.2 சதவீதம் அதிகரித்து, இந்த நிறுவனம் 34 ஆயிரத்து 157 கார்களை விற்பனை செய்துள்ளன.

* கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் கியா இந்தியா நிறுவனம் 8 ஆயிரத்து 957 கார்களை விற்பனை செய்து இருந்தது. 2025ம் ஆண்டு டிசம்பரில், 108.0 சதவீதம் அதிகரித்து, இந்த நிறுவனம் 18 ஆயிரத்து 659 கார்களை விற்பனை செய்துள்ளன.

கடந்த 2024ம் ஆண்டு டிசம்பரில் மாருதி நிறுவனம் 1.30 லட்சம் கார்களை விற்பனை செய்திருந்தது. இந்நிறுவனம் 2025 டிசம்பரில் 1.78 லட்சம் கார்களை விற்பனை செய்துள்ளது. இது 37 சதவீதம் உயர்வாகும்.

ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்ட பிறகு, சிறிய கார்களுக்கான தேவையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதாக மாருதி சுசுகி நிறுவனம் தெரிவித்துள்ளது. இருசக்கர வாகனத்தை பொறுத்தவரை ராயல் என் பீல்டு நிறுவனம் டிசம்பரில் 93,177 பைக்குகளை விற்பனை செய்துள்ளது. இது வழக்கத்தை விட 37 சதவீதம் அதிகம். இது குறித்து விற்பனையாளர்கள் கூறியதாவது:

ஜிஎஸ்டி வரி குறைப்பு மற்றும் 2025 நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் ஏற்பட்ட பண்டிகை கால விற்பனைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இதுதான் கார்கள் விற்பனை வழக்கத்தை விட உச்சம் தொட்டதுக்கு முக்கிய காரணமாகும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஆசிரியர்களை வாட்டி வதைக்காதீர்கள்; போராட்டத்துக்கு சீமான் ஆதரவு

சென்னை, ஜன.3-

நாட்டின் வருங்காலத் தலைமுறையைச் செதுக்கும் சிற்பிகளான ஆசிரியர்களை வாட்டி வதைக்காமல் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை: அரசுப்பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்களில் குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டும் தமிழ்நாடு அரசு குறைவான ஊதியம் வழங்கி வருவது சிறிதும் அறமற்ற செயலாகும். ஆட்சிக்கு வந்தவுடன் சம ஊதியம் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றாமல் தொடர்ச்சியாக திமுக அரசு ஏமாற்றி வருவது வன்மையான கண்டனத்திற்குரியது. ஒரே அரசின் நிர்வாகத்தின் கீழ் ஒரே வகையான பணிபுரியும் ஆசிரியர் பெருமக்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மட்டும் குறைவான ஊதியம் வழங்குவது எவ்வகையில் நியாயமானதாகும்?

ஆட்சிப் பொறுப்பேற்று 20 மாதங்களாகியும் தேர்தல் வாக்குறுதிப்படி, சம ஊதியம் வழங்காமல் திமுக அரசு ஏமாற்றி வருவதைக் கண்டித்து மீண்டும் ஆசிரியப் பெருமக்கள் பள்ளிக்கல்வித்துறை வளாகத்தில் முன்னெடுத்த தொடர்ப் போராட்டத்தின் போதும், 2024, 2025ம் ஆண்டுகளில் முன்னெடுத்த போராட்டங்களின் போதும் நேரில் சென்று ஆதரவளித்தேன். ஆனால், வழக்கம்போல் ஊதிய முரண்பாடுகள் களையப்படும் என்ற வாக்குறுதியளித்துப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த திமுக அரசு இன்றுவரை அதனை நிறைவேற்றவில்லை என்பது பெருங்கொடுமையாகும்.

ஆசிரியர்கள் தங்கள் வாழ்வாதார அடிப்படை உரிமையைப் பெறவேண்டி கடந்த 15 ஆண்டிற்கும் மேலாகத் தொடரும் இரு திராவிடக் கட்சி அரசுகளின் இத்தகைய பணியாளர் விரோதப் போக்கிற்கு எதிராக எத்தனை அறவழிப்போராட்டங்களை முன்னெடுத்தும் இன்றுவரை அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை. தற்போது மீண்டும் தங்களின் நியாயமானக் கோரிக்கைகள் வெல்ல கடந்த டிசம்பர் 26ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களின் கோரிக்கைகள் வெல்ல நாம் தமிழர் கட்சி தமது முழுமையான ஆதரவை அளிக்கிறது.

நாட்டின் வருங்காலத் தலைமுறையைச் செதுக்கும் சிற்பிகளான ஆசிரியர் பெருமக்களை இனியும் வாட்டி வதைக்காமல், ஊதியப் பாகுபாட்டைக் களைந்து, அனைத்து இடைநிலை ஆசிரியப் பெருமக்களுக்கும் சம ஊதியம் வழங்க உடனடியாக அரசாணை வெளியிட வேண்டும் என தமிழக அரசினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு சீமான் கூறியுள்ளார்.

# வங்கதேசத்தில் தொடரும் அட்டூழியம்: மேலும் ஒரு ஹிந்து தீ வைத்து எரிப்பு

டாக்கா, ஜன.3-

வங்கதேசத்தில் சிறுபான்மையினரான ஹிந்துக்கள் மீதான தாக்குதல்கள் தொடரும் நிலையில், மேலும் ஒருவரை தாக்கி தீ வைக்க முயன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில், கடந்தாண்டு வெடித்த மாணவர்கள் போராட்டங்களை தொடர்ந்து, பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவி விலகி, நம் நாட்டில் தஞ்சமடைந்தார். தற்போது அங்கு , நோபல் பரிசு பெற்ற முகமது யூனஸ் தலைமையிலான இடைக்கால அரசு அமைந்துள்ளது.

நாட்டின் தலைமை ஆலோசகராக இவர் பதவியேற்றது முதலே, வங்கதேசத்தில் சிறுபான்மையினராக உள்ள ஹிந்துக்கள் மீதும், ஹிந்து கோவில்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன.

வங்கதேசத்தில் அடுத்த மாதம் பொது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு ஹிந்துக்கள் மற்றும் கிறிஸ்துவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த 18ம் தேதி வங்கதேச மாணவர்கள் அமைப்பின் தலைவர் ஷெரீப் ஓஸ்மான் ஹாதி சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, அங்கு வன்முறை சம்பவங்கள் தீவிரம் அடைந்துள்ளன.

அங்குள்ளவர்கள் ஹிந்துக்களை தேடிப்பிடித்து தாக்குவதுடன், அவர்களின் வீடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்களும் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. வங்கதேசத்தில் உள்ள 30 மாவட்டங்களில், 70க்கும் மேற்பட்ட வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களில், மூன்று ஹிந்துக்கள் கொல்லப்பட்ட நிலையில் , நேற்று முன்தினம் மேலும் ஒருவர் தீ வைத்து எரிக்கப்பட்டார்.

ஷரியத்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கொகோன் தாஸ், 50, என்பவர் தன் வீட்டிற்கு சென்றபோது, வழிமறித்த கும்பல் ஒன்று, கூர்மையான ஆயுதங்களால் அவரை தாக்கியது. பின், தாசை தீ வைத்து எரித்துவிட்டு தப்பியோடியது.மருத்துவமனையில் ஆபத்தான நிலையில், சேர்க்கப்பட்ட அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.


புத்தாண்டுக்கு முந்தைய இரவு நிகழ்ந்த இந்த தாக்குதல், வங்கதேசத்தில் சிறுபான்மையினர் மத்தியில் அதிர்ச்சியையும், பீதியையும் அதிகரித்துள்ளது.

இந்திய எதிர்ப்பு உணர்வை மையப்படுத்தி, வங்கதேசத்தில் உள்ள முஸ்லிம் தீவிரவாத குழுக்கள் இந்த தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

# தேர்தலில் இவிஎம் பயன்படுத்த கர்நாடகாவில் 85% மக்கள் நம்பிக்கை; ராகுலை விளாசிய பாஜ

பெங்களூரு, ஜன.3-

கர்நாடகாவில் 2024 லோக்சபா தேர்தலின் போது மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதற்கு 85 சதவீதம் பேர் நம்பிக்கை தெரிவித்துள்ளது, ஆய்வு முடிவில் தெரிய வந்துள்ளது. இது காங்கிரசின் முகத்தில் விழுந்த அறை என்று பாஜ விமர்சித்துள்ளது.



கர்நாடகாவில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. லோக்சபா தேர்தல்கள் 2024 குடிமக்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறை பற்றிய மதிப்பீடு என்ற தலைப்பில் ஆய்வின் ஒரு பகுதியாக கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

மொத்தம் 34 மாவட்டங்களை உள்ளடக்கிய 102 சட்டசபை தொகுதிகிளில் 5100 பேரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் முடிவில், 83.61 சதவீதம் பேர் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரம் நம்பகமானது என்று கூறி இருக்கின்றனர். ஒட்டு மொத்தமாக, 69.39 சதவீதம் பேர் இந்த இயந்திரங்கள் துல்லியமான முடிவுகளை வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

பெங்களூரு, பெலகாவி, கலபுராகி, மைசூரு ஆகிய மண்டலங்களில் உள்ள மக்களிடம் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அவர்களில் கலபுராகி பகுதியில் 83.24 சதவீதம் பேர் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரம் நம்பகமானது என்று தெரிவித்துள்ளனர். இதுவே மைசூருவில் 70.67 சதவீதம், பெலகாவியில் 63.90 சதவீதம், பெங்களூருவில் 63.67 சதவீதம் பேர் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரம் மீது நம்பிக்கை இருப்பதாக கூறியுள்ளனர்.

இந்த ஆய்வு முடிவுகளை மேற்கோள் காட்டி, ராகுலை பாஜ கடுமையாக விமர்சித்துள்ளது. இது குறித்து அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் ஷெசாத் பூனம்வாலா கூறுகையில், கர்நாடகா, தெலுங்கானா, ஹிமாச்சல பிரதேச தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்ற போது தேர்தல் கமிஷன் மீது எவ்வித புகாரும் கூறாதவரும் இதே ராகுல்தான். தேர்தலில் தோற்கும் போது தேர்தல் கமிஷனை குற்றம் சொல்கிறார்.

அவரிடம் தான் பிரச்னை உள்ளது, தரவுகளில் அல்ல. அதை ஏற்றுக் கொள்ளாமல் ஒரு மாயையில் வாழ்கிறார் என்றார்.

கர்நாடகா எதிர்க்கட்சித் தலைவர் அசோக் கூறுகையில், நாடு முழுவதும் பயணித்து, நாட்டின் ஜனநாயகம் ஆபத்தில் உள்ளது என்று கதை சொன்னவர் ராகுல். இப்போது கர்நாடகா ஆய்வுகள் வித்தியாசமான கதையை சொல்லி இருக்கிறது. மக்கள் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரத்தை நம்புகின்றனர். காங்கிரசின் கண்டுபிடிப்பு, அக்கட்சியின் முகத்தில் விழுந்த ஓர் அறை என்று கூறினார்.



■ தமிழக முதல்வர் வருகிற 7 ம் தேதி திண்டுக்கல் வருகையையொட்டி திண்டுக்கல் கிழக்கு – மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நடைபெற்றது.இதில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் சுற்று வட்டார பகுதியில் ஏராளமான விவசாயிகள் பூக்கள் உற்பத்தி செய்து வருகின்றனர் தற்போது ஒரு வார காலமாக தட்பவெட்ப நிலை காரணமாக பூக்கள் வரைந்து குறைந்து காணப்படுகிறது இதனால் இன்று மல்லிகைப்பூ ஒரு கிலோ 3500 விற்பனை செய்யப்பட்டுள்ளதுஇதனால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்



■ பிஜேபி முன்னாள் கடலூர்நகரதலைவர்.வெங்கடேசன்.65வது பிறந்தநாள் இந்தியகுடியரசுகட்சி பாலவீரவேல் நேரில்வாழ்த்து.பிஜேபி முன்னாள் கடலூர்நகரதலைவரும் ஸ்ரீமுருகன் அச்சகஉரிமையாளருமான. வெங்கடேசன் அவர்களின் 65 வது பிறந்த தினத்தை ஒட்டி, இந்தியகுடியரசுகட்சி கடலூர்மாவட்டதலைவர் பாலவீரவேல் நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்துதெரிவித்தார். கடலூர்மருத்துவமனைஓய்வு.மரியதாஸ் உடன்இருந்தார்

# ‘மனித மூளையில் பொருத்தும் நியூராலிங்க் சிப் உற்பத்தியை அதிகரிக்க திட்டம்’ எலான் மஸ்க்

சென்னை, ஜன.3-

மனித மூளையில் பொருத்தும் நியூராலிங்க் சிப் உற்பத்தியை நடப்பு ஆண்டில் (2026) அதிகரிக்க திட்டம் இருப்பதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க்கின் நியூராலிங்க் நிறுவனம் உடலளவில் செயலிழந்தவர்களின் எண்ணங்களை செயல்படுத்தும் வகையில் மூளைக்கும், கணினிக்குமான இன்டெர்ஃபேஸ் (ஙிசிமி) இணைப்பை உருவாக்கும் வகையிலான ‘சிப்’ஐ மனித மூளையில் பொருத்தி சோதனையை மேற்கொண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் குரங்குகளை வைத்து இந்த சோதனையை நியூராலிங்க் நிறுவனம் செய்திருந்தது.



இதுவரை 12 பேருக்கு நியூராலிங்க் நிறுவனம் சிப் பொருத்தி உள்ளது. இதை அந்நிறுவனம் கடந்த நவம்பரில் தெரிவித்திருந்தது. கடந்த 2024ல் நோலண்ட் அர்பாக் என்பவருக்கு முதல் சிப்இனை நியூராலிங்க் நிறுவனம் பொருத்தியது. அந்த சிப்பை பொருத்திக் கொண்டதன் மூலம் தன் வாழ்வில் தான் சந்தித்த மாற்றங்களை கடந்த ஆகஸ்ட் மாதம் நோலண்ட் அர்பாக் பகிர்ந்திருந்தார்.

உடல் அசைவு செயலிழப்பால் பாதிக்கப்பட்ட தன்னால் கணினி, ஏர் பியூரிபையர், தொலைக்காட்சி உள்ளிட்ட டிஜிட்டல் சாதனங்களை கட்டுப்படுத்த முடிவதாக அவர் அப்போது தெரிவித்திருந்தார். இந்நிறுவனத்தின் சிப் இந்த வகை பாதிப்பு கொண்ட மக்கள் டிஜிட்டல் சாதனங்களை கட்டுப்படுத்த உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

“பிசிஐ சிப் உற்பத்தியை அதிகரிக்கும் பணியில் நியூராலிங்க் நிறுவனம் தொடங்கியுள்ளது. 2026ல் தானியங்கி அறுவை சிகிச்சை முறையில் சிப் பொருத்தும் பணியை மேற்கொள்ளும் திட்டம் உள்ளது. இந்த சிப்களை பொருத்த பயன்படுத்தும் த்ரெட்களை அகற்ற வேண்டியதில்லை” என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

# அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு காளைக்கு உடல் பரிசோதனை

அலங்காநல்லூர். ஜன.03-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் வரும் 17ஆம் தேதி நடைபெற உள்ள உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டை முன்னிட்டு கால்நடை துறை சார்பாக ஜல்லிக்கட்டு காளைகளுக்கு பரிசோதனை நடைபெற்றது. கால்நடைத்துறைமதுரை மண்டல இணை இயக்குனர் ராம் குமார், தலைமையில் கால்நடை மருத்துவர்சங்கரவிநாயகம்



கலந்துகொண்டு ஜல்லிக்கட்டு காளைக்கு கொம்பு, திமிலு ,பல்லு உள்ளிட்டவைகளை பரிசோதனை செய்தார். தொடர்ந்து மாலை வரை பரிசோதனை நடைபெற்றது. பரிசோதனைக்கு பின் குறிப்பேட்டில் எழுதிபதிவு செய்யப்பட்டது. இதில் 150க்கு மேற்பட்ட ஜல்லிக்கட்டு காளைகள் கலந்து கொண்டனகால்நடைத்துறை பணியாளர்கள் மற்றும் ஜல்லிக்கட்டு காளை வளர்ப்போர் கலந்து கொண்டனர்.

# கனடாவின் வான்கூவர் விமான நிலையத்தில் மது குடித்ததாக புகார்: ஏர் இந்தியா பைலட்டிடம் தீவிர விசாரணை

வான்கூவர், ஜன.3-

ஏர் இந்தியா விமானம் ஒன்று கடந்த டிசம்பர் 23ம் தேதி கனடாவின் வான்கூவர் நகரிலிருந்து டெல்லிக்கு புறப்பட தயாராக இருந்தது.




ஏர் இந்தியா விமான பைலட் மது பாட்டில் வாங்கும்போது அவர் மீது மது வாடை வீசியதையோ அல்லது ஒயின் அருந்தியதையோ கவனித்த வான்கூவர் விமான நிலைய ஊழியர் ஒருவர், உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளார். இதையடுத்து, பைலட்டுக்கு மூச்சு பகுப்பாய்வு சோதனை நடத்தப்பட்டுள்ளது. அதில் அவர் மது அருந்தியது உறுதியாகி உள்ளது.

இதையடுத்து, அவரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்தி உள்ளனர். விமானம் ஓட்டுவதற்கான தகுதியை பைலட் இழந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் விமானம் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து தகவல் அறிந்த ஏர் இந்தியா நிர்வாகம், அவரை பணியிலிருந்து தற்காலிகமாக விடுவித்ததுடன் வேறு ஒரு பைலட்டை பணியில் ஈடுபடுத்தி விமானத்தை அனுப்பி வைத்துள்ளது.

இதனால் அந்த விமானம் சுமார் 2 மணி நேரம் தாமதமானதாகக் கூறப்படுகிறது. இந்த தகவல் இப்போது வெளியாகி உள்ளது. இந்த சம்பவம் நடந்த சில தினங்களுக்குப் பிறகு, அந்த பைலட் டெல்லி திரும்பினார். அவரிடம் ஏர் இந்தியா நிர்வாகம் விசாரணை நடத்தி வருகிறது. இதுதொடர்பாக விளக்கம் அளிக்குமாறு விமானப் போக்குவரத்து இயக்குநரகம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

இதுகுறித்து ஏர் இந்தியா வெளியிட்ட அறிக்கையில், “விதிமுறைகள் மற்றும் சட்டத்தை மீறும் எந்தவொரு செயலையும் ஏர் இந்தியா சகித்துக் கொள்ளாது. பயணிகளின் பாதுகாப்புக்கு நாங்கள் முதல் முன்னுரிமை வழங்குகிறோம். பைலட் மீதான புகார் உறுதி செய்யப்பட்டால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என கூறப்பட்டுள்ளது.

# புத்தரின் புனிதப்பொருட்கள் கண்காட்சி; டில்லியில் நாளை தொடங்கி வைக்கிறார் மோடி

புதுடில்லி, ஜன.3-

நாளை (ஜன.3) கவுதம புத்தரின் புனிதப் பொருட்கள் கண்காட்சியை திறக்கிறேன், இது ஒரு மிக சிறப்பான நாள் என்று பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

பிரதமர் மோடி எக்ஸ் பதிவில் கூறி உள்ளதாவது;

ஜன.3ம் தேதியான நாளை, வரலாறு, கலாசாரம் மற்றும் பகவான் புத்தரின் கொள்கைகள் மீது ஆர்வம் கொண்டவர்களுக்கு ஒரு மிகச் சிறப்பான நாள். காலை 11 மணிக்கு, பகவான் புத்தர் தொடர்பான புனித நினைவுச்சின்னங்களின் மாபெரும் சர்வதேசக் கண்காட்சி, ஒளியும் தாமரையும்: ஞானம் பெற்றவரின் நினைவுச்சின்னங்கள் என்ற பெயரில் டில்லியில் உள்ள ராய் பித்தோரா கலாசார வளாகத்தில் திறந்து வைக்கப்பட உள்ளது.

இந்தக் கண்காட்சியானது நூற்றாண்டுகள் கழித்து கொண்டு வரப்பட்ட பிப்ரஹ்வா நினைவுச் சின்னங்கள், டில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகம் மற்றும் கோல்கட்டாவில் இந்திய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள உண்மையான நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருட்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது.

கண்காட்சி, பகவான் புத்தரின் உன்னதமான சிந்தனைகளை மேலும் பிரபலப்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டிற்கு இணங்க அமைந்துள்ளது. நமது இளைஞர்களுக்கும் நமது செழுமையான கலாசாரத்திற்கும் இடையிலான பிணைப்பை மேலும் ஆழப்படுத்துவதற்கான ஒரு முயற்சி. நினைவுச்சின்னங்களைத் தாயகம் கொண்டு வர உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

இவ்வாறு பிரதமர் மோடி தமது பதிவில் கூறி இருந்தார்

# கடந்த 2025ம் ஆண்டில் மட்டும் 13.52 கோடி லட்டு பிரசாதங்கள் விற்று திருப்பதி தேவஸ்தானம் சாதனை

திருமலை, ஜன.3-

திருப்பதி தேவஸ்தானம் கடந்த 2025ம் ஆண்டில் மட்டும் 13.52 கோடி லட்டு பிரசாதங்களை விற்று சாதனை படைத்துள்ளதாக தேவஸ்தான மடப்பள்ளி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டு பிரசாதம் உலக பிரசித்தி பெற்றதாகும். ஏனெனில், இதன் சுவையே தனித்துவம் வாய்ந்ததாகும். அரசர் காலத்தில் ஏழுமலையான் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பல விதமான பிரசாதங்கள் வழங்கப்பட்டு வந்தன.

வெகு தூரத்தில் இருந்து மாட்டு வண்டி, குதிரை வண்டிகளில் திருமலைக்கு வரும் பக்தர்கள், ஊர் திரும்பி செல்லும்போது வழியில் உண்பதற்கு சில நாட்கள் வரை கெடாமல் இருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. புளியோதரை, எலுமிச்சை, தயிர் சாதம், மிளகு வடை போன்றவை இவ்வாறு வழங்கப்பட்டு வந்தது. ஏழுமலையான் பிரசாதத்தை ‘திருப்பொங்கம்’ என்றழைத்தனர். அதன்பின்னர் இனிப்பு சுய்யம், அப்பம் (கி.பி.1455 ), வடை (கி.பி. 1460ம் ஆண்டு), அதிரசம் (கி.பி. 1468), மனோகரப்படி (கி.பி. 1547), வழங்கப்பட்டது. பின்னர் ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில் 19ம் நூற்றாண்டில் மஹந்துக்கள் திருப்பதி கோயிலை பராமரித்து வந்த போது, பக்தர்களுக்கு பிரசாதமாக பூந்தி வழங்கப்பட்டது.

1940ம் ஆண்டு பக்தர்களுக்கு லட்டு பிரசாதமாக வழங்கப்பட்டது. அப்போது முதற்கொண்டு தொடர்ந்து லட்டு பிரசாதம் பக்தர்களுக்கு திருமலை திருப்பதி தேவஸ்தானம் விநியோகம் செய்து வருகிறது.

ஒரே நாளில் 5.13 லட்சம்: தற்போது, சந்திரபாபு நாயுடு ஆட்சிக்கு வந்த பின்னர், லட்டு பிரசாதத்தின் தரம் உயர்த்தப்பட்டது. இதனால் லட்டு பிரசாத விற்பனையும் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கடந்த 2024ம் ஆண்டில் 12.15 கோடி லட்டுகள் விற்பனையாகி உள்ளது. இதுவே கடந்த 2025ல் 13.52 கோடி லட்டு பிரசாதங்கள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. இதில் கடந்த டிசம்பர் 27ம் தேதி மட்டும் ஒரே நாளில் 5.13 லட்சம் லட்டுகள் விற்பனையாகி உள்ளன.

கடந்த ஓராண்டாக சராசரியாக நாள் ஒன்றுக்கு 4 லட்சம் லட்டுகள் விற்பனையாகி உள்ளன. பிரம்மோற்சவம், வைகுண்ட ஏகாதசி, ரதசப்தமி உள்ளிட்ட முக்கிய நாட்களில் தினமும் 8 முதல் 10 லட்சம் லட்டுகள் விற்பனைக்கு வைக்கப்படுகிறது. ஏழுமலையான் கோயில் மடப்பள்ளியில் மட்டும் 700 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். சமீபத்தில் இவர்களுக்காக ஊதியமும் உயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னிலைக்கோட்டைக்கு சிற்றுந்து வசதி செய்து கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி, ஜன 03-

செட்டியபட்டி மற்றும் முன்னிலைக்கோட்டை ஊராட்சிக்கு சிற்றுந்து வசதி செய்து கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள், விவசாயிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த செட்டியபட்டி மற்றும் முன்னிலைக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் தங்கள் கிராமங்களிலிருந்து திண்டுக்கல் நகருக்கு சிற்றுந்து வசதி வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர்.சிற்றுந்து வசதி செய்துகொடுக்க உத்திரவிட்டதன்பேரில்,




சிற்றுந்துகள் தொடக்கவிழா செட்டியபட்டி மற்றும் ஆரியநல்லூரில் நடைபெற்றது. விழாவிற்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டி.ராஜா வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் ஆகியோர் கொடியசைத்து, சிற்றுந்துகளை இயக்கி வைத்தனர். பள்ளி மாணவர்களும் கல்லூரிகளுக்;கு எளிதாக செல்லும் நிலை உருவாகியுள்ளது என்றார். நிகழ்ச்சியில் செட்டியபட்டி ஊராட்சியைச் சேர்ந்த வேளாங்கண்ணிபுரம் சுரேஷ், ஊர் முக்கிய பிரமுகர் அலெக்ஸ், ஊராட்சி செயலாளர் கன்னையா, செட்டியபட்டி ஊர் முக்கிய பிரமுகர் சுப்பிரமணி, திருப்பதி, நாகராஜ், முன்னாள் வார்டு உறுப்பினர் கோமாளி (எ) பிரகாஷ், நண்பர்புரம் பரமன், சக்திவேல், செந்தில், ரவிச்சந்திரன், பாண்டிச்செல்வி, ஜெயலெட்சுமி, அமுதா, பிரீத்தா, கார்த்திகா, வேல்மணி, ஜான்சிபொன்மலர், எல்லப்பட்டி ரமேஷ்குமார், வளையபட்டி சங்கர் இதுபோல முன்னிலைக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி தங்கவேல், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் அலெக்ஸ், நிக்சன்பால், தொண்டரணியைச் சேர்ந்த கண்ணதாசன், கிளைச்செயலாளர்கள் ஜஸ்டின், ராயப்பன், ஊராட்சி செயலாளர் தண்டபாணி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# கொல்கத்தா குவாஹாட்டி இடையே படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில்

புதுடெல்லி, ஜன.3-
கொல்கத்தா குவாஹாட்டி இடையிலான வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயிலை பிரதமர் நரேந்திர மோடி விரைவில் தொடங்கி வைப்பார் என ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

நாடு முழுவதும் முக்கிய வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில் இயக்கப்படுகிறது. விரைவான பயணம், வசதியான இருக்கைகள், ஏ.சி. வசதி, பயோ கழிப்பறை, தானியங்கி கதவுகள், சிசிடிவி கண்காணிப்பு என பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் அதி நவீன வசதிகளை கொண்ட இந்த ரயில்களுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

இந்த ரயில்களில் தற்போது இருக்கை வசதி மட்டுமே உள்ளது. இந்நிலையில் நீண்ட தூர இரவு நேரப் பயணத்துக்காக தற்போது படுக்கை வசதி கொண்ட ரயில்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன் முதல் ரயில் மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் இருந்து அசாமின் குவாஹாட்டி வரை இயக்கப்பட உள்ளது.

இதுகுறித்து ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேற்று டெல்லியில் கூறியதாவது: கொல்கத்தா குவாஹாட்டி இடையிலான ஸ்லீப்பர் ரயிலை பிரதமர் நரேந்திர மோடி விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்.

இந்த ரயிலின் கட்டணங்கள் விமானக் கட்டணத்தை விட கணிசமாக குறைவாக இருக்கும். இதன் சேவை அடுத்த 15 20 நாட்களில், ஜனவரி 18 அல்லது 19ம் தேதி வாக்கில் செயல்பாட்டுக்கு வரும். இதனை தொடங்கிவைக்க பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அடுத்த 23 நாட்களில் தேதியை அறிவிப்பேன்.

குவாஹாட்டி ஹவுரா விமானப் பயணத்துக்கு சுமார் ரூ.6,000 முதல் ரூ.8,000 வரை செலவாகும். வந்தே பாரத் ரயிலில் உணவு உட்பட 3ம் வகுப்பு ஏசி கட்டணம் சுமார் ரூ.2,300 ஆகவும், 2ம் வகுப்பு ஏசி சுமார் ரூ.3,000 ஆகவும், 1ம் வகுப்பு ஏசி சுமார் ரூ.3,600 ஆகவும் இருக்கும். நடுத்தர வர்க்கத்தினரை கருத்தில் கொண்டு இந்தக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# பொங்கல் தொகுப்பில் ரொக்கப் பணமும் தர வேண்டும்: நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜன.3-
பொங்கல் பரிசுத் தொகுப்பில் ரொக்கப் பணமும் வழங்க வேண்டும் என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை: இன்னும் 13 நாட்களில் பொங்கல் திருநாள் வரவிருக்கும் வேளையில், இப்போது தான் பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது திமுக அரசு.

பொங்கலுக்கு ரூ.5 ஆயிரம் ரொக்கப் பணம் வழங்கவேண்டும் எனப் பொதுமக்களும், தொகுப்பில் மஞ்சள் கிழங்கு, வெல்லம் வழங்கிட கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகளும் எதிர்பார்த்து வரும் வேளையில், சொற்பத் தொகையை ஒதுக்கி, அவர்களின் நம்பிக்கையை உடைத்து, வழக்கம் போல ஏமாற்றத்தைப் பரிசளித்துள்ளது திமுக அரசு.

வருடா வருடம் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் நிலையில், இத்தனை நாட்கள் பரிசுத் தொகுப்புக்கான கரும்பையும் பச்சரிசியையும் சக்கரையையும் கொள்முதல் செய்யாதது ஏன்? ஒருவேளை, கடைசி நேரத்தில் கண்துடைப்புக்காக ஏனோதானோ எனக் கொள்முதல் செய்து, உழவர்களையும் பொதுமக்களையும் ஏமாற்றும் திட்டமா?

ஆட்சி முடியும் தருவாயிலாவது திமுக அரசின் போங்காட்டத்தை ஒதுக்கி வைத்து உடனடியாகக் கரும்பையும் மஞ்சளையும் வெல்லத்தையும் கொள்முதல் செய்து, ரூ.5 ஆயிரம் ரொக்கத்துடன் பொங்கல் பரிசை முதல்வர் ஸ்டாலின் சரிவர வழங்க வேண்டும்.

வழக்கமான பாசாங்கு வேலைகளை விடுத்து, உடனடியாக விவசாயிகளிடமிருந்து பொருட்களைக் கொள்முதல் செய்து, தமிழக மக்களுக்கு ரொக்கப் பணத்துடன் பொங்கல் பரிசுத்தொகுப்பை திமுக அரசு வழங்க வேண்டும். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# மலை பாதைகளில் மண் சரிவு: மலை ரயில் ரத்து

ஊட்டி, ஜன.3-
கனமழை காரணமாக மண் சரிவு ஏற்பட்டதால், ஊட்டி குன்னூர் மலை ரயில் ரத்து செய்யப்பட்டது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு நீடித்தது. நேற்று இரவு முதல் விடாமல் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. குன்னூரில் 21.5 செ.மீ. மழை அளவு பதிவானது.

நள்ளிரவில், மேட்டுப்பாளையம் பாதையில் மண் சரிவில், டிப்பர் லாரி சிக்கியதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. மலை ரயில் பாதையில் வெலிங்டன் மற்றும் ஹில் குரோவ் உட்பட சில இடங்களில்



மண் சரிவு ஏற்பட்டு தண்டவாளம் முழுவதும் மூடியது. இதனால் ஊட்டி குன்னூர் மலை ரயில் ரத்து செய்யப்பட்டது.

மேட்டுப்பாளையத்தில் இருந்து 210 சுற்றுலா பயணிகளுடன் வந்த மலை ரயில் மீண்டும் திரும்பி சென்றது. சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். மலை ரயில் பாதையில் ரயில்வே பொதுப்பணி துறை ஊழியர்கள் சீரமைப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குன்னூர் உழவர் சந்தை பகுதியில் மண் சரிவு ஏற்பட்டதால் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு கார்கள் சேதமானது. இந்த பகுதிகளில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து மக்கள் பாதிக்கப்பட்டனர். சீரமைப்பு பணியில் நகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டனர்.

மண்சரிவில் மின் கம்பங்களும் சரிந்தால் குன்னூரில் மின் தடை ஏற்பட்டுள்ளது. கொட்டும் மழையில் மின் ஊழியர்கள் சீரமைப்பில் ஈடுபட்டுள்ளனர். ஊட்டி குன்னூர் சாலையில் மண்சரிவால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு பயணிகள் சிரமப்பட்டனர்.

# “ஒரு சிலரின் சுயநலத்தால் தமிழ்நாடு காங்கிரஸ் அழிவின் பாதையில் செல்கிறது” : ஜோதிமணி எம்.பி

சென்னை, ஜன.3-
“ஒரு சிலரின் சுயநலத்துக்காக தமிழ்நாடு காங்கிரஸ் கொஞ்சம் கொஞ்சமாக அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என ஆதங்கப்பட்டுள்ள அக்கட்சியின் எம்பி ஜோதிமணி, இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது என்பதை உண்மையான காங்கிரஸ் தொண்டர்கள் உணர வேண்டிய நேரம் இது.” என குறிப்பிட்டுள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: எந்த ஒரு அரசியல் கட்சியும் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை, தேர்தல் நேரத்தில், தேர்தல் ஆணையத்துக்கு வாக்குச் சாவடி முகவர் பட்டியலை கொடுக்க விடாமல் முடக்க வேண்டும் என்று நினைக்காது. ஆனால் காங்கிரஸ் கட்சியில் அது நடக்கிறது.



தமிழ்நாடு காங்கிரஸில் நடைபெறும் விசயங்கள் மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளன. கொள்கை நிலைப்பாடுகளை, அரசியல் செயல்பாடுகளை நீர்த்துப் போகச் செய்ய நடக்கும் முயற்சிகள் மிகுந்த வேதனை அளிக்கிறது. தினமும் தமிழ்நாடு காங்கிரஸ், மக்கள் பிரச்சினைகள் அல்லாத தவறான காரணங்களுக்காகவே செய்திகளில் அடிபடுகிறது. தமிழ்நாடு எந்தக் காலத்திலும் இல்லாத, ஒரு பேராபத்தை மதவாத, பிரிவினைவாத, வன்முறை சக்திகளிடமிருந்து எதிர்நோக்கி உள்ளது. எதையாவது செய்து, மக்கள் உணர்வுகளைத் தூண்டி, ஆட்சி அதிகாரத்தைப் பிடித்து, பெருந்தலைவர் காமராசர், பெரியார் உள்ளிட்ட மாபெரும் தலைவர்களால் கட்டிக் காக்கப்பட்ட இம்மண்ணின் சமூக நீதி, சுயமரியாதை, மக்கள் நல அரசியல், வளர்ச்சியை குழிதோண்டிப் புதைக்க ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது.இந்தச் சூழலில், எதிர்நோக்கியுள்ள தேர்தலை மிகக் கவனமாக கையாள வேண்டிய பொறுப்பு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உள்ளது. ஆனால் காங்கிரஸ் கட்சி அந்த மாபெரும் பொறுப்பை சரியாக உணர்ந்துள்ளதா என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. 60 ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாத போதும் தொடர்ந்து காங்கிரஸ் கொடியை, ஒவ்வொரு ஊரிலும் பெருமையோடு கையில் ஏந்தியிருக்கும் காங்கிரஸ் தொண்டர்களின் உணர்வுகளையும், மதவாத, பிரிவினைவாத சூழ்ச்சிக்கு அடிபணியாமல் சமூக நீதி, சுயமரியாதை, மாநில உரிமைகளுக்காகப் போராடுவதில் உறுதியோடு இருக்கும் நமது தமிழ்நாட்டு மக்களையும் நாம் கைவிட்டு விடக்கூடாது.

தமிழ்நாடு காங்கிரஸில், எவ்வித கட்டுப்பாடுமற்று தொடரும் உட்கட்சிப் பிரச்சினைகள் மிகுந்த மனச்சோர்வை ஏற்படுத்துகின்றன. சித்தாந்த ரீதியான அரசியலை காத்திரமாக முன்னெடுக்காமல், மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல், வெறும் கூட்டல் கழித்தல்களை மட்டுமே செய்து கொண்டு, ஒரு சிலரின் சுயநலத்துக்காக தமிழ்நாடு காங்கிரஸ் கொஞ்சம் கொஞ்சமாக அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது என்பதை உண்மையான காங்கிரஸ் தொண்டர்கள் உணர வேண்டிய நேரம் இது.தலைவர் ராகுல்காந்தியின் தன்னலமற்ற, கொள்கைப் பிடிப்பு மிகுந்த, அச்சமற்ற அரசியலுக்கு நேர் எதிரான பாதையில் தமிழ்நாடு காங்கிரஸ் சென்று கொண்டிருக்கிறது. அவரது கடின உழைப்புக்கும் ஒப்பற்ற தியாகத்துக்கும் நாம் துரோகம் செய்ய முடியாது.தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு இருக்கும் அடையாளம், மரியாதை என்பது காமராசர் கட்டிக் காத்த பாரம்பரியத்துக்கும், நேரு காந்தி குடும்பத்தின் தியாகத்துக்குமான தமிழ்நாட்டு மக்களின், அன்பும், மரியாதையும் தான் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# என்கவுன்ட்டர்கள்: 48 முக்கிய குற்றவாளிகள் உயிரிழப்புஉத்தர பிரதேசத்தில் 2025ல் 2,739 என்கவுன்ட்டர்கள்: 48 முக்கிய குற்றவாளிகள் உயிரிழப்பு

புதுடெல்லி, ஜன.3-
இந்தியாவில் குற்றச் செயல்கள் அதிகம் நடைபெறும் மாநிலங்களில் உ.பி. முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

இம்மாநிலத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக ஆட்சி அமைந்த பிறகு குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக கருதப்படுகிறது. இதற்கு குற்றவாளிகளுக்கு எதிரான என்கவுன்ட்டர்கள காரணமாக கூறப்படுகிறது.

இந்நிலையில் உ.பி. காவல் துறை இயக்குநர் ராஜீவ் கிருஷ்ணா செய்தியாளர்களிடம் கூறியதாவது: "உ.பி.யில் 2025ம் ஆண்டில் மட்டும் 2,739 என்கவுன்ட்டர்களை காவல் துறை நடத்தி உள்ளது. இவை அனைத்தும் சட்டத்துக்கு உட்பட்டு நடத்தப்பட்டன. இதில் 3,153 குற்றவாளிகள் காயமடைந்தனர். ஒரு காவலர் வீரமரணம் அடைந்தார். உ.பி.யின் 48 முக்கிய குற்றவாளிகள் கொல்லப்பட்டுள்ளனர். முந்தைய 8 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இதுவே அதிக எண்ணிக்கை ஆகும்.



உ.பி.யில் கடந்த 2017 மார்ச் 20ம் தேதி தொடங்கி 2025 டிசம்பர் 29ம் தேதி வரை மொத்தம் 266 குற்றவாளிகள் என்கவுன்ட்டர்களில் கொல்லப்பட்டுள்ளனர். 2018ல் 41, 2019ல் 34, 2020 மற்றும் 2021ல் தலா 26 என குற்றவாளிகள் என்கவுன்ட்டர்களில் கொல்லப்பட்டுள்ளனர். 2025ல் சட்டவிரோத மத மாற்றம் தொடர்பாக 475 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 855 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 379 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பசு கடத்தல் மற்றும் பசு வதைக்கு எதிராக 1,197 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 3,128 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 958 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் 1,886 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.7.38 கோடி மதிப்புள்ள சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

2025ல் திருட்டு, கொள்ளை மற்றும் வழிப்பறி வழக்குகளில் 8,543 இருசக்கர வாகனங்கள், 911 நான்கு சக்கர வாகனங்களை காவல்துறை மீட்டுள்ளது. ரூ.28.69 கோடி ரொக்கம், ரூ.52.27 கோடி மதிப்புள்ள நகைகள் மற்றும் ரூ.58.17 கோடி மதிப்புள்ள பிற சொத்துகளை பறிமுதல் செய்துள்ளது. இவ்வாறு ராஜீவ் கிருஷ்ணா கூறினார்.

# கேரளாவில் காலணி உற்பத்தி தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து

## 5 மணி நேரமாக வீரர்கள் போராட்டம்

மலப்புரம், ஜன.3-
கேரளாவில் காலணி உற்பத்தி ஆலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில், ஆலையின் பெரும் பகுதி எரிந்து சேதம் அடைந்தது.

இதுபற்றிய விவரம் வருமாறு;

மலப்புரம் அருகே உள்ள அரவங்காரா என்ற பகுதியில் காலணி உற்பத்தி தொழிற்சாலை உள்ளது. இங்கு திடீரென தீப்பிடித்ததாக அங்குள்ளோர் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனடியாக சம்பவ பகுதிக்கு தீயணைப்புத்துறையினர் விரைந்து சென்றனர். தீயை அணைக்கும் முயற்சியில் அவர்கள் களம் இறங்கினர்.ஆனால், தீயின் கொடூரம் அதிகமாக இருந்ததோடு, மற்ற பகுதிகளுக்கும் தீ ஜுவாலைகள் வேகமாக பரவின.

இதையடுத்து, திரூர், பொன்னானி, மஞ்சேரி, மீஞ்சந்தா, பெரிந்தல்மன்னா ஆகிய பகுதிகளில் இருந்து 10க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் கூடுதலாக வரவழைக்கப்பட்டன. தொழிற்சாலையின் அருகில் குடியிருப்பு பகுதிகள் அதிகம் இருந்ததால் தீயை அணைக்க அவர்கள் முற்பட்டனர்.

கிட்டத்தட்ட 5 மணி நேர போராட்டத்திற்கு பின்னர் அவர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும், ஆலையின் 90 சதவீதம் முற்றிலும் எரிந்து போய்விட்டது. தீ விபத்துக்கான காரணம் என்பது தெரியாத நிலையில், மின்கசிவே காரணமாக இருக்கலாம் என்று தீயணைப்புத்துறையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தில் ஏற்பட்ட சேதாரம் என்ன என்பது பற்றி எவ்வித தகவல்களும் தெரியவில்லை. இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வீடியோவால் அம்பலமான கிட்னி திருட்டு விவகாரம்: திருச்சி மருத்துவருக்கு மகாராஷ்டிர போலீஸ் வலை!

புதுடெல்லி, ஜன.3-
சட்டவிரோத கிட்னி விற்பனையில் ஈடுபட்ட திருச்சியைச் சேர்ந்த மருத்துவர் ராஜரத்தினம் கோவிந்தசாமி தலைமறைவாக உள்ளதாக மகாராஷ்டிரா காவல் துறை தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிராவின் சந்திரபூரைச் சேர்ந்த இளம் சிறு விவசாயியான ரோஷன் குடே என்பவர் கடந்த மாதம் ஒரு வீடியோ வெளியிட்டிருந்தார். அதில், வட்டிக்கு பணம் கொடுப்பவரிடம் இருந்து தான் பெற்ற ரூ. 1 லட்சம் பணத்தை திருப்பிச் செலுத்துவதற்காக தனது ஒரு சிறுநீரகத்தை விற்றதாகவும், ஆனாலும், தான் வாங்கிய தொகை வட்டியுடன் ரூ. 70 லட்சத்துக்கும் அதிகமாகிவிட்டதாகவும் கூறி இருந்தார்.

இதையடுத்து, சந்திரபூர் போலீசார் இது குறித்து விசாரணை நடத்தினர். அப்போது, வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள், கிட்னியை விற்கத் தூண்டும் முகவர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கு இடையே இருந்த கூட்டு சதி அம்பலமாகி உள்ளது.

மேலும், டெல்லி மற்றும் திருச்சிக்கும், கம்போடியாவுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு ஏழை மக்களிடம் இருந்து சட்டவிரோதமாக கிட்னி திருடப்பட்டு வந்ததும் தெரிய வந்துள்ளது.



இந்த சம்பவம் தொடர்பாக 'தி இந்து' செய்தியாளரிடம் பேசிய சந்திரபூர் காவல் கண்காணிப்பாளர் மும்மகா சுதர்ஷன், "சந்திரபூர் விவசாயி வெளியிட்ட வீடியோவை அடிப்படையாகக் கொண்டு வட்டிக்கு பணம் கொடுப்பவர்களை காவலில் எடுத்து விசாரித்தோம்.

இந்த விசாரணையில், ஏழை இளைஞர்களை சில லட்சம் பணத்துக்காக சிறுநீரகங்களை விற்கத் தூண்டிய மோசடிக் கும்பலை நாங்கள் கண்டறிந்தோம். நாங்கள் இதுவரை எட்டு பேரை கைது செய்துள்ளோம். அவர்களில் ஆறு பேர் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள். இரண்டு பேர் பாதிக்கப்பட்டவர்களைத் தூண்டிய முகவர்கள்.

மேலும், டெல்லியில் உள்ள ஹெல்தி ஹியூமன் கிளினிக்ஸைச் சேர்ந்த ரவீந்தர் பால் சிங் என்ற மருத்துவரை நாங்கள் கைது செய்தோம். ஆனால், அவருக்கு ஜாமின் கிடைத்துவிட்டது. தமிழ்நாட்டின் திருச்சியில் உள்ள ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் ராஜரத்தினம் கோவிந்தசாமி தலைமறைவாக இருக்கிறார். நாங்கள் அவரை தேடி வருகிறோம். நாங்கள் அவரது மருத்துவமனையிலும் சோதனை நடத்தினோம்.

பாதிக்கப்பட்டவர்களில் சிலர் கம்போடியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்களின் சிறுநீரகங்கள் அகற்றப்பட்டுள்ளன. தங்கள் சிறுநீரகங்களை விற்ற எட்டுக்கும் மேற்பட்டவர்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். சந்திரபூரைச் சேர்ந்த விவசாயி ரோஷன் குடே, மேலும் ஐந்து பேருடன் கம்போடியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

முகவர்களாக செயல்பட்ட ஹிமான்ஷு பரத்வாஜ், கிருஷ்ணா ஆகியோர், ஏற்கனவே தங்கள் சிறுநீரகங்களை விற்றுள்ளனர். இந்த மோசடி கும்பலில் உள்ள பல முகவர்கள், சிறுநீரக தானம் செய்தவர்கள். ஹிமான்ஷு பரத்வாஜ் ஆகிய இருவரும் தங்கள் சிறநீரகத்தை தானம் செய்த பிறகு மற்றவர்களை தூண்டும் ஏஜண்டுகளாக மாறி உள்ளனர். இவர்கள், ஏழைகள், விளிம்புநிலை விவசாசிகள் மற்றும் இளைஞர்களை சிறுநீரகங்களை விற்க தூண்டும் ஒரு கும்பலை உருவாக்கி உள்ளனர்.

இந்த மோசடியின் பின்னணியில் மருத்துவர்களும் மருத்துவமனைகளும் உள்ளன. இந்த இளைஞர்கள், டெல்லி, திருச்சி அல்லது கம்போடியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

முக்கிய குற்றவாளிகளின் மொபைல் மற்றும் தொழில்நுட்ப தரவுகளை காவல்துறை பகுப்பாய்வு செய்துள்ளது. முகவர்கள், தானம் செய்பவர்கள், மருத்துவர்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றைக் கொண்ட இந்த வலையமைப்பு கம்போடியா வரை நீண்டுள்ளது.

சிறுநீரகத்தை தானமாகப் பெறுபவர்களிடம் இருந்து ரூ. 50 லட்சம் முதல் ரூ. 80 லட்சம் வரை வசூலிக்கப்பட்ட நிலையில், தானம் கொடுத்தவர்களுக்கு அதில் 10% மட்டமே கிடைத்துள்ளது. அதாவது, சிறுநீரகத்தை தானம் செய்த இளைஞர்களுக்கு ரூ. 5 லட்சம் முதல் ரூ. 8 லட்சம் வரை மட்டுமே கிடைத்துள்ளது. மருத்துவர் ரவீந்தர் பால் சிங் தோராயாயமாக ரூ. 10 லட்சம் பெற்றுள்ளார். டாக்டர் ராஜரத்தினம் கோவிந்தசாமி, சிகிச்சை மற்றும் மருத்துவமனை ஏற்பாடுகளுக்காக ரூ. 20 லட்சம் வசூலித்துள்ளார். ஏஜெண்டுகளான ஹிமான்ஷு பரத்வாஜ், கிருஷ்ணா ஆகியோர் சுமார் ரூ. 20 லட்சம் வசூலித்துள்ளனர்" என தெரிவித்துள்ளார்.

அப்பாவி ஏழை இளைஞர்களை ஏமாற்றி அவர்களின் சிறுநீரகங்களை சட்டவிரோதமாக பெற்ற விவகாரம் தற்போது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000